ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

அறிவிப்பு இல : HRC/A/i/T/05/04/24

அறிவிப்பு

**கருப்பொருள் உபக் குழுக்களை மீண்டும் தொடங்குதல்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்ட மனித உரிமைகள் சவால்களில் கவனம் செலுத்தும் பல்வேறு கருப்பொருள் உபக் குழுக்களை 2016 ஆம் ஆண்டு நிறுவியது. இந்த உபக் குழுக்கள் ஆணையாளர்களால் தலைமை தாங்கப்பட்டதுடன், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், கருப்பொருள் வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டிருந்தன.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் கருப்பொருள் உபக் குழுக்களை மீண்டும் 2024 இல் தொடங்க முடிவு செய்துள்ளது. எட்டு புதிய உபக் குழுக்கள் பின்வரும் கருப்பொருள்களில் கவனம் செலுத்தப்படவுள்ளது:

1. தனிப்பட்ட சுதந்திரம்[1]
2. பால்நிலை மற்றும் பாலியல் தோற்றுவாய் மற்றும் பால்நிலை அடையாளம்
3. சிறுவர் உரிமைகள்
4. கருத்து வெளியிடும் சுதந்திரம்
5. சமூக-பொருளாதார உரிமைகள்
6. இயலாமையுடைய நபர்கள்
7. மலையக தமிழ் சமூகம்
8. வியாபாரம் மற்றும் மனித உரிமைகள்[2]

---

[1] சித்திரவதை, கட்டுககாவல் மற்றும் என்கவுண்டர் மரணங்கள், தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைத்தல் போன்ற பிரச்சினைகளை இந்தக் கருப்பொருள் உள்ளடக்கியது.

[2] இந்தக் கருப்பொருள் தொழிலாளர்களின் உரிமைகள், தொழிலாளர் சீர்திருத்தம், மேம்பாட்டுத் திட்டங்களால் ஏற்படும் உரிமை மீறல்கள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் போன்றவற்றை உள்ளடக்கியது.

**உள்ளடக்கப்படுபவர்கள்**

ஒவ்வொரு துணைக் குழுவும் பின்வரும் பத்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளராக இருக்கும் ஒரு தலைவர்;
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளராக இருக்கும் ஒரு அறிக்கையாளர்;
- குறிப்பிட்ட கருப்பொருளில் பணிபுரியும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளான ஆறு உறுப்பினர்கள்; மற்றும்
- கருப்பொருள் நிபுணர்களான இரண்டு உறுப்பினர்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.வின் இது தொடர்பான உத்தியோகத்தர்களும் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்வார்கள்.

**நியமன செயல்முறை**

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு உபக் குழுக்களுக்களிலிருக்கும் சிவில் சமூக அமைப்புகளிலிருந்து ஆறு பிரதிநிதிகள் மற்றும் இரண்டு கருப்பொருள் வல்லுநர்களையும் நியமிப்பதற்கு அழைப்பு விடுக்கின்றது.

- அனைத்து பெயர்குறிப்பிடுதலும் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும் மற்றும் அதனுடன் (அ) பெயர்குறிப்பிடப்படுபவரின் ஒப்புதல் கடிதம்; மற்றும் (ஆ) பெயர்குறிப்பிடப்படுபவரின் சுயவிபரக்கோவை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட உபக் குழுவிற்கு பெயர்குறிப்பிடப்படலாகாது.

- சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமிப்பாளர்கள் இவை தொடர்பான தலைப்பில் பணிபுரியும் புகழ்பெற்ற சிவில் சமூக அமைப்பின் கடிதத்தில் இருக்க வேண்டும் மற்றும் அமைப்பின் தலைவரால் கையொப்பமிடப்பட வேண்டும். ஒரு அமைப்பு ஒரு உப குழுவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்குறிப்பிடப்படுபவர்களைச் சமர்ப்பிக்கக்கூடாது (அதாவது, ஒரு அமைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை ஒரு உப குழுவிற்கு நியமிக்க முடியாது, ஆனால் தனி உப குழுக்களுக்கு தனி நபர்களை நியமிக்கலாம்).

- கருப்பொருள் வல்லுனர்களுக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான நியமனங்களில், ஒவ்வொரு பெயர்குறிப்பிடப்படுபவர்களையும் அக்கருப்பொருள் தொடர்பாக பணிபுரியும் குறைந்தது மூன்று புகழ்பெற்ற சிவில் சமூக அமைப்புகளால் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

பெயர்குறிப்பிடப்பட்டவரின் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு உபக் குழுவின் இறுதி உள்ளடக்குனர்களை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானிக்கும். முடிந்தவரை, பால்நிலை, இனம், பிராந்திய பிரதிநிதித்துவம், வயது மற்றும் இயலாமை நிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு உபக் குழுவின் அமைப்பிலும் சமநிலையை உறுதிப்படுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முயற்சிக்கும். நியாயமான காரணத்திற்காக எந்தவொரு உபக் குழுவின் உறுப்பினரின் உறுப்புரிமையை நிறுத்துவதற்கான அதிகாரத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது.

நியமனங்கள் chair.hrcsl@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் பிரதியொன்று rm.director.hrcsl@gmail.com முகவரிக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

நியமனங்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி திகதி 31.05.2024 ஆகும்.

**நியதிகளும் நிபந்தனைகளும்**

உபக் குழுக்களின் நியதிகளும் நிபந்தனைகளும் அவையாவன:

**சட்டம், கொள்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ நடைமுறைகள் மற்றும் ஒவ்வொரு கருப்பொருள் தொடர்பான நடைமுறைகளையும் மீளாய்வு செய்தல் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கான அதன் கொள்கைப் பரிந்துரைகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழிகாட்டுதல்;**

**ஒவ்வொரு கருப்பொருளையும் பொறுத்தமட்டில் கல்வி மற்றும் விழிப்புணர்வை வளர்ப்பதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குதல்;**

**ஒவ்வொரு கருப்பொருளையும் பொறுத்தமட்டில் முக்கிய ஆராய்ச்சியை மேற்கொள்வதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல்; மற்றும்**

**ஒவ்வொரு கருப்பொருளுக்கும் பொருத்தமான சர்வதேச மனித உரிமை பொறிமுறைகளுக்கு பிரதிநிதித்துவம் செய்வது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குதல்.**

உபக்குழுக்கள் குறைந்தபட்சம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒருமுறை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் கூடும், மேலும் தேவையானபோது, கொழும்பிற்கு வெளியே உள்ள உறுப்பினர்களின் தொலைதூர பங்கேற்பை செயல்படுத்துவதற்காக கூட்டங்கள் கலப்பு முறையிலும் நடத்தப்படும்.

ஊடகப் பேச்சாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
01.05.2024